**பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் - 2020**

--------------------------------------------------------------------------------------------------------

பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 யூலை 25 ஆம் திகதிய 6228 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 5.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

--------------------------------------------------------------------------------------------------------

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுல்ப்படுத்தல் முகவராகவும் உள்ளது. பொதுக் கல்வி முறைமையின் தரத்தை மேம்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். ஆரம்ப மற்றும் இரண்டாம் தர கல்வியின் தரத்தை மேம்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்துதல், செயற்பாட்டு மற்றும் தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித்திட்டம் எனும் பெயரிலான 02 கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 449,645 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2,900 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 15,505 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டது. ரூபா 434,140 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஆகஸ்ட் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

------------------

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செலவினக் கூற்றையும் காசுப்பாய்ச்சலையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

--------------------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------
--

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.1 **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018.04.05 ஆம் திகதிய செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 52 ஆம் பிரிவு | 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 யூலை 9 வரை மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல் (validation) நிறுவனம் நியமனம் செய்யப்பட்டிருக்காததன் காரணமாக குறிகாட்டிகளைப் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான சுயாதீன மதிப்பீட்டு அறிக்கை உலக வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கொவிட்-19 காரணமாக பாடசாலை மூடப்பட்டதால் 2020 ஆம் ஆண்டிற்கான மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல் அறிக்கைகள் (TPV) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கல்வி அமைச்சின் 2020 மே 29 ஆம் திகதிய எச்டி/21/05/05-01 ஆம் இலக்க கடிதம் | கூறு I மற்றும் II இன் கீழ் கொவிட் 19 பரவுவதைத் தடுப்பதற்காக மாகாணக் கல்வித் திணைக்களங்களுக்கு ரூபா 617.36 மில்லியன் தொகை விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்ற அறிக்கைகள் அந்தந்த திணைக்களங்களால் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்ட நிதி தொடர்பாக கணக்காய்வின் போது சரிபார்க்க முடியாதிருந்தது. | அனைத்து மாகாண கல்வி திணைக்களங்களுக்கும் அந்த அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போதைய சூழ்நிலை காரணமாக அவ்வாறான அறிக்கைகள் எதிர்பார்த்தவாறு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | அமைச்சின் வழிகாட்டலிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்ட செயற்பாட்டு கைநூலின் 07 ஆம் பிரிவு, 2016 யூன் 10 ஆம் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 133 | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கல்வி அமைச்சின் உள்ளக கணக்காய்வை மேற்கொள்வதில் தாமதமொன்று காணப்பட்டதால் உரிய கிளையுடன் கலந்துரையாடி அதனை சீர்செய்து கொள்ள முடியும். | உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | செயற்திட்ட செயற்பாட்டு கைநூலின் 5.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்காக செயற்திட்டத்தின் வழிகாட்டல் குழு கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | மாகாணங்களுக்கான நிதி பரிமாற்றம் தாமதமானதால், மறுசீரமைப்பு செயன்முறை பூர்த்தியடையும் வரை வழிநடாத்தல் குழு அழைக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட செயற்பாட்டு கைநூலிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

| கூறு | செயற்பாடு | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயங்கள் | தாமதத்திற்கான காரணங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் | | | | |
| | | சதவீதம் | சதவீதம் | | | | |
| கூறு (அ) | I பெறுகைத் திட்டம் | 21 | 9 | பெறுகை திட்டத்தின் பிரகாரம் 21 தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரண உருப்படிகளை கொள்வனவு செய்வதற்கு ரூபா 105 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 9 பெறுகைகள் மாத்திரம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் பல்வேறு காரணங்களால் 7 பெறுகைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. | பெறுகை நடவடிக்கைகளிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகளில் சில கொவிட்-19 ஐத் தடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக மாற்றப்பட்டிருந்தன. | பெறுகை நடவடிக்கைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட சில நிதிகள் பாடசாலை துப்பரவு மற்றும் பாடசாலை சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததால் கொவிட்-19 பரவுவதைத் தடுக்கும் அதேவேளை பாடசாலைகளை செயற்படுத்தும் பொருட்டு இந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வசதிகள் வழங்கப்பட வேண்டியிருந்தன. | பெறுகை திட்டத்தில் வழங்கப்பட்ட காலப்பகுதியின் போது பெறுகை நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டும். |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மிகுதியாகவுள்ள தொகை அமைச்சின் கிளைகளுக்கு மாற்றப்பட்டுள்ளமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அதன் செயன்முன்னேற்றம் 42.8 சதவீதமாக காணப்பட்டது. | | | |
| கூறு (ஆ) | I | பாடத்திட்ட அபிவிருத்தி | 20 | 05 | பாடத்திட்டத்தை உருவாக்குபவர்கள் மற்றும் ஏனைய மனித வள நடவடிக்கைகளுக்காக SLEAS இற்காக 20 முதுகலை பட்டப்படிப்புகளை நடத்துவதற்கு ரூபா 242 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 6 சதவீதத்திற்கு சமமான ரூபா 14.34 மில்லியன் தொகை மீளாய்வாண்டிற்காக ஐந்து உத்தியோகத்தர்களிற்கு முதுகலை பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டதை நடாத்துவதற்கு செலவிடப்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக உலகம் முழுவதும் உள்ள பல நாடுகள் மூடப்பட்டன. | உலகம் முழுவதும் பரவியுள்ள கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக இந்த ஆண்டு முதுகலை பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை கற்பதற்கு 20 பேரை வெளிநாடுகளுக்கு அனுப்ப திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இந்த ஏற்பாடுகள் அப்படியே இருந்தன. எனினும் ஒன்லைனில் கற்கக்கூடிய ஐந்து உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் அவர்களது கற்றலை தொடங்கியிருந்தனர். | குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு மீளாய்வாண்டிற்காக திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளின் நோக்கத்திற்காக ஒதுக்கீடு பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கூறு (இ) | I | கோட்பாட்டு திறன் கட்டமைப்பு | ரூபா மில்லியன் | 40.4 | ரூபா மில்லியன் | 1.53 | கோட்பாட்டு திறன் கட்டமைப்பிற்கு ரூபா 40.4 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது, ஒதுக்கீடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காக ரூபா 1.53 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. | கொவிட்-19 காரணமாக ஆரம்ப முதன்மை பயிற்சி கற்கைநெறிகள் நடாத்தப்பட்டிருக்க வில்லை. | கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக ஆரம்ப முதன்மை பயிற்சி கற்கைநெறிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. 480 தமிழ் மொழிமூலப் பணிகளுக்கான மதிப்பீடுகள், பயிற்சி, மாகாண வளவாளர்களின் மதிப்பீடு என்பன பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. இந் நடவடிக்கைகளுக்கான கிரயம் ரூபா 1,528,230 ஆகும். | குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளிற்காக ஒதுக்கீடு பயன்படுத்தப்பட வேண்டும். |
| கூறு (ஈ) | I | இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | ரூபா மில்லியன் | 10 | ரூபா மில்லியன் | 1.24 | இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா 10 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதில் ரூபா 1.24 மில்லியன் மாத்திரமே இலக்கிடப்பட்ட பணிகளுக்கு செலவிடப்பட்டிருந்தது. | கொவிட்-19 காரணமாக திட்டமிடப்பட்ட பணிகளை அமுல்ப்படுத்த முடியாதிருந்தது. | SLEAS மற்றும் SLTES உத்தியோகத்தர்களுக்கு மூன்று பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இந் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான கிரயம் ரூபா 1,242,035 ஆகும். கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக 2020 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட பணிகளை அமுல்ப்படுத்த முடியாதிருந்தது. | குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளிற்காக ஒதுக்கீடு பயன்படுத்தப்பட வேண்டும். |
| கூறு (உ) | I | வெப்பமானிகளின் கொள்வனவு | ரூபா மில்லியன் | 148.9 | ரூபா மில்லியன் | 3.1 | சுகாதாரம் மற்றும் போசாக்குக் கிளையானது 10,175 பாடசாலைகளுக்கு ரூபா 148.9 மில்லியன் நிதியேற்பாட்டில் | உடல் வெப்பநிலையை அளவிடுதல் அவசியமில்லை என்று சுகாதார அமைச்சு கல்வி | கொவிட்-19 தொற்றுநோயைத் தடுப்பது தொடர்பாக சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட வழிகாட்டலின் பிரகாரம் | சுகாதார அமைச்சு வழிகாட்டலுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | வெப்பமானிகளை கொள்வனவு செய்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் மாணவர்களின் உடல் வெப்பநிலையை அளவிடுதல் அவசியமில்லை என சுகாதார அமைச்சுக் குழுவின் ஆலோசகர் தெரிவித்திருந்திருந்தார். ஆனால் சுகாதார அமைச்சின் பரிந்துரைக்கு முரணாக கல்வி அமைச்சு ரூபா 3.1 மில்லியன் தொகையை செலவிட்டிருந்தது. | அமைச்சிற்கு அறிவித்திருந்தது. | அந்தந்த நிறுவனங்களுக்குள் நுழைவதற்கு முன்னர் மக்களின் உடல் வெப்பநிலையை அளவிடுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது. | |
| கூறு (ஊ) | I | முகக் கவசங்களை கொள்வனவு செய்து வழங்குதல் | ரூபா மில்லியன் 335 | ரூபா மில்லியன் 71.2 | சுகாதாரம் மற்றும் போசாக்குக் கிளை ரூபா 335 மில்லியன் நிதியேற்பாட்டில் நாடளாவிய ரீதியில் 10,175 பாடசாலைகளுக்கு முகக் கவசங்களை கொள்வனவு செய்து வழங்குவதற்குத் திட்டமிட்டிருந்த போதிலும் அந் நோக்கத்திற்காக ரூபா 71.2 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. | திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு குறைபாடுகள் | கல்வி அமைச்சுக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டுநிதியின் பிரகாரம் அனைத்து பாடசாலைகளுக்கும் பாடசாலை அடிப்படையிலான மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிலையில், பாடசாலை சுகாதாரம் மற்றும் போசாக்கு கிளை கல்வி அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்துடன் அனைத்து அரசாங்க பாடசாலைகளுக்கும் | நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | அதன் நிதி செயன்முன்னேற்றம் 21 சதவீதமாக காணப்பட்ட போதிலும் பௌதீக செயன்முன்னேற்ற அறிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | முழுமையான மானியமாக மானியங்களை வழங்கியிருந்தது. | |
| கூறு (அ) | II | பாடத்திட்ட அபிவிருத்தி | ரூபா 10 மில்லியன் | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை. | தேசிய கல்வி நிறுவகத்திற்கு ரூபா 10 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதை சரிபார்ப்பதற்கான சான்றாதாரங்கள் எதுவும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கண்காணிப்பு குறைபாடுகள் | அவர்கள் பாடத்திட்ட அபிவிருத்தி செயன்முறைக்கு இந்த ரூபா 10.0 மில்லியன் தொகையை பயன்படுத்தியிருந்தனர் என தேசிய கல்வி நிறுவகம் எமக்கு அறிவித்திருந்தது, முன்னைய நடவடிக்கைகள் உட்பட எதிர்காலத்தில் தேசிய கல்வி நிறுவகத்திடமிருந்து நிதி செயன்முன்னேற்றத்துடன் பௌதீக செயன்முன்னேற்ற அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு கல்வி அமைச்சு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். | பயன்படுத்தப்பட்ட நிதிகளின் சான்றாதாரங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செயன்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, ஆண்டின் இறுதியிலுள்ளவாறான செயன்முன்னேற்ற அறிக்கையுடன் ஒப்பிடும் போது பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம் மதிப்பிடப்பட முடியாதிருந்தது. | வருடாந்த அமுல்ப்படுத்தல் திட்டத்தின் (2020) பிரகாரம் அமுல்ப்படுத்தப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் அந்தந்த ஆண்டின் செயலாற்றல் (செயன்முன்னேற்றம்) அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் செயன்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| பாடத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும், நிபுணத்துவத்தை மேம்படுத்துவதற்கும், ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கும் தேசிய கல்வி நிறுவகத்திற்கு ரூபா 120 மில்லியன் தொகையான ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த ஒதுக்கீட்டில் இருந்து ரூபா 95 மில்லியன் தொகை செயற்திட்ட நோக்கங்களுக்கு முரணான நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டுள்ளது. | கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக, பாடசாலை மூடப்படும் காலத்தில் மாணவர்களின் கல்வியைத் தொடர்வதை உறுதிப்படுத்தும் பொருட்டு கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை ஒளிபரப்பு செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இச்சூழலில், கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் மற்றும் ஏனைய தொடர்புடைய உத்தியோகத்தர்கள் இணைந்து ஒலி-காணொளிக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரிப்பதில் பணியாற்றியிருந்தனர், அவர்களுக்கு போக்குவரத்து வசதிகளும், தேசிய கல்வி நிறுவக பதவியணியினரிற்கு மாதமொன்றிற்கு 300 மணித்தியால மேலதிகநேர கொடுப்பனவும் வழங்கப்படுகின்றன. குரு கெதர கல்வி தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான மேற்படி நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் ரூபா 220.15 மில்லியன் ஆக காணப்பட்டது. | செயற்திட்ட நோக்கங்களிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகள் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.4 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| 155,475 சிங்கள மொழிமூலமான மற்றும் 73,475 தமிழ் மொழிமூலமான கதைப் புத்தகங்களின் பிரதிகளை அச்சிட்டு வழங்குவதற்காக ரூபா 5.76 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ள போதிலும் ரூபா 2.3 மில்லியன் பெறுமதியான 94,000 புத்தகங்கள் 2021 பெப்ரவரி 24 வரையிலும் விநியோகிக்கப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டன. | "Yalu Yalu Yaluwo" என்ற சிறுவர் கதைப் புத்தகத்தின் 155,475 சிங்களப் பிரதிகளும், 73,475 தமிழ்ப் பிரதிகளும் அச்சிடப்பட்டு அதன் விநியோகம் 2020 சனவரி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும், கொவிட்-19 தொற்றுநோயின் விளைவாகப் பாடசாலை மூடப்பட்டதால் இப் புத்தகத்தை முறையாக விநியோகிக்க முடியாதிருந்தது. | மேலதிக தாமதமின்றி காணப்படும் இருப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |